## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.12 /2019

இந்நீதிமன்றத்து எழுத்தா் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவா்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு நவம்பர் மாதம் **19** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 19.12.2023**

**பெயர் - விஜயன் என்கிற ஏசு**

**த/பெ - இராமன்**

**சாட்சி - DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 3.25. p.m.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

7. எனது பிரமான பத்திரத்தில் தாக்கல் செய்துள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையா என்றால் ஆமாம். எனது பிரமான பத்திரத்தில் 3ம் பத்தியில் 2 ஏக்கா் 42 செண்ட் நிலம் பல்வேறு நபா்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமான வாக்குமூலத்தில் 5= ம் பத்தியில் வாதி தாவா சொத்து 2 ஏக்கா் 42 செண்ட் என தெரிவித்தது முற்றிலும் பொய்யானது என நான் தெரிவித்துள்ளேன் என்றும், அவ்வாறு எனில் தாவா சொத்து மேற்படி நில அளவை விட குறைவா அல்லது அதிகமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 2 ஏக்கா் 42 செண்ட் நிலத்தில் எங்கள் தரப்பிற்கும் வாதிகள் தரதப்பிற்கும் பாதி பாதி பிரித்து கொடுக்கப்பட்டதாக தொவித்த நிலையில் எங்களுக்கு எவ்வளவு நிலம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. ஊக்கனுக்கு பிறந்தவா்கள் எத்தனை நபா்கள் என்றால் எனது தந்தையாா் இராமன் மட்டும்தான். அப்போது மீதமுள்ள 7 நபா்கள் யாா் என்றால் எனக்கு தெரியாது. ஊக்கனுக்கு எனது தந்தையாா் மட்டுமே வாரிசு என குறிக்கும் வகையில் ஊக்கனின் இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

8. எனது தந்தையார் இராமனின் தந்தை ஊக்கன் என்பதை குறிக்கும் வகையில் ஆதார் அட்டையோ, குடும்ப அட்டையோ, வாக்காளர் அடையாள அட்டையோ போன்ற அரசு ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலுமா என்றால் வீட்டிற்கு சென்று தேடி பார்க்க வேண்டும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஆவணத்தில் உள்ள புகைப்படம் யாருடையது என்றால் எனது தந்தையாருடையது. அது எனது தந்தையாரின் ஆதார் அட்டையா என்றால் ஆமாம். **மேற்படி ஆவணத்தை சாட்சி அடையாளம் காட்டியதன் அடைப்படையில் அவ்வாவணம் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் வாக்காளர் பட்டியலில் எங்கள் குடும்பத்தார் பெயர்கள் 169 முதல் 174 வரை வரிசையாக வருகிறது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 169 ஆவது வரிசை எண்ணில் எனது தந்தையார் பெயர் இராமன் த/பெ கிருஷ்ணன் என்று உள்ளது என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தை சாட்சி அடையாளம் காட்டியதன் அடைப்படையில் அவ்வாவணம் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. பொதுவாகவே நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்தால் தண்டனை உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. நன்கு தெரிந்த எனது தாத்தா பெயரை மாற்றி சொத்திற்காக பொய்யாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியத்தின் பொய் தன்மை நிரூபிக்கப்பட்டால் எனக்கு தண்டனை வழங்க ஏதுவாகும் என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் பொய்யாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் இது நிரூபிக்கப்பட்டால் எனக்கு தண்டனை கிடைக்கும் என்று கூறினால் நான் பொய் கூறவில்லை நான் உண்மையைத்தான் தெரிவிக்கிறேன்.

**விசாரணை முடியும் நேரம்- 3.48. p.m.**